Tamil Nadu Special Police

*451 Q.—Thiru K. SAHADEVA KANDER : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Tamil Nadu Special Police and the Special Armed Police are to be merged in this State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மலபார் சிறப்புக் காவற்படையும் படைக் கலந்தாங்கிய சிறப்புக் காவற்படையும் தமிழ் நாடு சிறப்புக் காவற்படையெனப் பெயரிடப்படவேண்டுமென 1968 மே மாதம் அரசு ஆணையிட்டது. இந்தச் சிறப்புக் காவற்படைகளின் அணிப்பிரிவுகள் இந்த மாநில அரசால் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒன்றாக இணைக்கும் வினாவிற்கு இடமில்லை. பொதுவான பணி விதிகளை வகுப்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசிடமிருந்து பெற்ற அரிசி

*458 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70-ம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைத்த அரிசியின் அளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1969 ஆம் ஆண்டில் மத்திய அரசு மாநில அரசுக்கு 80,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்தது. மாநில அரசுக்கு 79,642 டன் அரிசி மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிடமிருந்து அரிசி வழக்கமாக ஒதுக்கப்பட்ட அளவுதானா இது அல்லது வறட்சியை முன் னிட்டு, அதிகப்படியான அரிசி ஒதுக்கப்பட்டதா? அப்படி அதிகமாக ஒதுக்கியிருந்தால், அதன் அளவு என்ன என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் குறிப்பிட்ட 79,642 டன் அதிக மாக மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு கொடுத்தது தான்.

Dr. H. V. HANDE : Usually Tamil Nadu gets rice from Andhra State and sends rice to Kerala State. Is this under instructions from the Centre and has the Centre been approached for getting adequate Andhra rice for the City of Madras? Are we now getting enough rice from Andhra State to Madras City, especially Nellore rice?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கா ரிடத்திலிருந்து நாம் அரிசி கேட்கும்போது, ஆந்திராவிலிருந்து அல்லது வேறு வேறு மாநிலங்களிலிருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்பதில்லை. பற்றாக் குறைக்கு ஏற்றபடி 3 லட்சம் டன் தேவை என்று கேட்டதற்கு அவர்கள் 79,642 டன் கொடுத்தார்கள். ஆந்திரா அரிசி வருகிறதா என்று கேட்டார்கள், சட்டப்படி ஆந்திரா அரிசி வருவதில்லை.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ப்ரோகன் ரைஸ், மற்ற தானியங்கள் . . .